# “பறக்க விடுங்கள், அவர்களது சிறகுகளை வெட்டாதீர்கள்”

**For immediate release**

Press Release

25 நவம்பர் 2019 (கொழும்பு, இலங்கை)




வீழ்த்த வேண்டாம் அவர்கள் பிரகாசிக்கட்டும்
அவர்கள் இப்பாடலைக் கேட்கும் போது சிரிப்பதைப் பாருங்கள்
அவர்களுக்கு நம்பிக்கையளித்து எல்லோருக்கும் இதைத் தெரியப்படுத்துங்கள்

**ரித்மவின் சரியான குரலும் மெல்லிசையும் நம்பிக்கையை எதிரொலிக்க வைக்கிறது.**

“சிறுவர்கள் தங்களது சிறு பராயத்தை சரியான வழியில் செலவிட வேண்டுமெனில் சிறுவர் தொழிலாளர்கள் முற்று முழுதாக இல்லாதொழிக்கப்பட வேண்டும்”. அவர் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும் இருந்தான். அவரது சமீபத்திய பாடலான சிறகை விரித்து (ஆங்கிலத்தில Let them fly என மொழி பெயர்க்கப்பட்டது) நவம்பர் 26 ஆம் திகதி கொழும்பில் வெளியிடப்படப்படும். இந்தப் பாடலானது உலகெங்கிலுமுள்ள இசைக்கலைஞர்கள் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிரான உலகளாவிய இசையின் ஒரு பகுதியாக உலகிலும் இலங்கையிலும் சிறுவர்களை வேலைக்கமவர்த்துவதை அடியோடு இல்லாதொழிக்க பங்களிப்பு செய்கிறது.

இலங்கையிலுள்ள மிகப் பிரபல்யமான இளம் கலைஞர்களில் ஒருவரான ரித்ம வீரவர்த்தன சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தினுடனான (ஐ. எல். ஓ)தமது தொடர்பின் மூலம் சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிராக இவ்விசையைக் கொண்டு போராடுகிறார்.

சிறுவர் தொழிலாளர்களுக்கு எதிராக ஒரு பாடலை அர்ப்பணிப்பதற்காக உலகிலுள்ள இசைக் கலைஞர்கள் எல்லோரையும் அழைக்கும் சிறுவர் தொழிலாளர் முயற்சிக்கெதிரான இசை 2013 ஆம் ஆண்டு ஐ.எல்.ஓ மற்றும் உலகிலுள்ள மிகச் சிறந்த இசைக்கலைஞர்களால் தொடக்கி வைக்கப்பட்டது.

சிறுவர் தொழிலாளர்களுக்கெதிரான இந்த போராட்டத்தில் ரித்ம வீரவர்த்தனவுடனான இணைவும், விரைவில் வெளியிடப்படவிருக்கும் இசை மற்றும் வீடியோக்கள் ஒரு முக்கியமான விடயமாக அமைவதாக சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான பணிப்பாளர். திருமதி. சிம்ரின் சிங் தெரிவிக்கிறார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் “இலங்கையிலுள்ள இசைக் கலைஞர்கள், தமது திறமைமைகள் மற்றும் ஆற்றல்களைப் பயன்படுத்தி உலகளாவிய இசைக் கலைஞர்களுடன் கைகோர்த்து இந்த சிறுவர் தொழிலாளர்களை இல்லாதொளிப்பதற்கான விழிப்புணர்வுச் செயற்பாட்டில் ஈடுபடுவதை பார்க்குமிடத்து மகிழ்ச்சியடைகிறேன்” எனக் குறிப்பிடுகிறார்.

இலங்கையின் விவசாயத் துறையில் சிறுவர் தொழிலாளர்கள் ஒப்பீட்டளவில் குறைவானதாகவே (ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில்) காணப்படுகிறது. இப்பிரச்சினையை முற்று முழுதாக இல்லாதொழிக்க அரசாங்கம் உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புக்களுடன் இணைந்து பணியாற்றியதன் விளைவாக சிறுவர் தொழிலாளர் சம்பவங்கள் 1 வீதமளவாகவேக் காணப்படுகிறது. எவ்வாறாயினும் இந்த குறைந்த வீதத்திலுள்ள சிறுவர் தொழிலாளர்கள்

ILO Office for Sri Lanka and the Maldives
202 – 204, Bauddhaloka Mawatha,
Colombo 7,
Sri Lanka.

Tel. +94 11 259 2525
Fax. +94 11 250 0865
E-mail: colombo@ilo.org

*For information only. Not an official record.*

அபாயகரமான மற்றும் மறைக்கப்பட்ட நிலைமைகளிலேயே காணப்படுகின்றனர் என்பதோடு இது ஒன்றுமேயற்ற பூச்சிய நிலையை அடைவதற்கு மிகச்சவாலானதாக காணப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு இலங்கை 8.7 கூட்டணியில் (alliance 8.7) சுய பிரகடனப்படுத்தப்பட்ட பாத்பைண்டர் (pathfinder) நாடாக இணைந்தது. இக்கூட்ணியானது 2025 ஆம் ஆண்டில் அடையவிருக்கும் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு முன்பதாகவே 2022 ஆம் ஆண்டு மிக மோசமான அனைத்து சிறுவர் தொழிலாளர் நிலைமைகளையும் முற்றுமுழுதாக இல்லாதொழிப்பதற்கு உறுதி பூண்டுள்ளது.

உலகில் 152 மில்லியன் ஆண், பெண் சிறுவர் தொழிலாளர்கள் காணப்படுவதாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களுக்கு தேவையேற்படும்போது நாம் அங்கு இருப்போம்
ஒரு உதவியாக
எம்மால் அவர்கள் கிழித்துவிடப்படமாட்டார்கள் என்பதை அறிவார்கள்.
இசையுலககம் ஒரு நிலைப்பாட்டிலுள்ளது!

#**NO**ChildLabour

----------------------------------------------------------END----------------------------------------------------------------------

For more information please contact: Mr. Asitha Seneviratne, ILO Country Office for Sri Lanka and the Maldives: asitha@ilo.org , Tel: + 94112592525

Web Facebook Twitter Flickr Youtube

Press Release